1968 ஆகஸ்ட் 26]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரிடம் உள்ள அதிகாரங்களை மாநில அரசுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திவரும் இந்த அரசுக்கு முதலில் இந்த அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரங்களை ஸ்தல ஸ்தாபனங்களிடம் பகிர்ந்து கொடுக்க முன்வரும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்குக் கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் கிடைத்தால் குவிந்திருப்பதாகச் சொல்ல முடியும். அந்த நிலை வரும்பொழுது நிச்சயமாகப் பகிர்ந்து கொடுப்பதிலே எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. To my knowledge the heads of the panchayats are known as presidents. May I know when they became 'chairman' as is now printed in the question list ? மூற் பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியிலே பஞ்சாயத்துத் தலைவர் என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. "சேர்மன்" என்று தவருகத்தான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பள்ளிப் பாளையம் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை கதவடைப்பும் தொழிலாளர் நிலையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையம் சேஷசாயி பேப்பர் மில் திடீரென்று 23—8—1968 தேதி முதல் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளதைப் பற்றியும் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்த தொழிலாளர்களை கடுமையாகத் தாக்கியும் தொழிற்சங்க ஊழியர்களை கைது செய்துள்ளதைப்பற்றியும் அதனுல் 3,000 பேர்களுக்கு மேல் வேலையில்லாமல் கஷ்டப்படுவதைப்பற்றியும் விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள்.

தொழில் தகராறுகளைத் தீர்க்க வேறு வழிவகைகள் இருக்கிற காரணத்தாலும், கதவடைப்புச் செய்வது, வேலை நிறுத்தம் ஆகியவற்றைப்பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சட்ட மன்ற விதிகள் இருப்பதாலும் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, இரண்டிற்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒரே கூட்டத்தில் கொண்டுவருவது சம்பந்தமான விதியைத் தளர்த்த வேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.